உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (27-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 233

# புலிகளின் வசமுள்ள பகுதியிலிருந்து வவுனியா வருவதற்கு புதிய பாதை!

## தொண்டர் நிறுவனங்கள் புலிகளுடன் தொடர்பு

கொழும்பு, ஜூலை 27

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வவுனியா வருவதற்கு சாஸ்திரி கூழாங்குளம், மருக்காரம்பளை ஆகிய இடங்கள் ஊடாக புதிய பாதை ஒன்றைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் —

விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமான சமிக்ஞை கிடைக்குமானால் அடுத்த வாரமே இந்தப் பாதை திறக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று புதிய பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள்

கொழும்பு, ஜூலை 27

மூன்று புதிய பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பி. கே. சி. பெரேரா தென் பிராந்தியத்துக்கும், சமிலஸ் அபேகுணவர்த்தன வட பிராந்தியத்துக்கும், நந்தா ஜினசேன கிழக்குப் பிராந்தியத்துக்கும் புதிய பிரதிப் பொலீஸ் மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கறுப்பு ஜூலை தினத்தையொட்டி லண்டனில் தமிழர் நேற்று பேரணி!

## ரொனி பிளயரிடம் மகஜர் கையளிப்பு

லண்டன், ஜூலை 27

"கறுப்பு ஜூலை" எனப்படும் 1983 ஜூலையில் இலங்கையின் தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப் பட்ட வன்முறைச் சம்பவங்களை நினைவு கூருமுகமாக, லண்டனில் உள்ள தமிழ் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

தமிழர் ஐக்கிய அமைப்பும் இங்கிலாந்திலுள்ள ஏனைய தமிழ் அமைப்புகளும் ஒன்று சேர்ந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

பேரணி நண்பகல் தொடங்கியது. தமிழர் ஐக்கிய அமைப்பின் சார்பாகவும், இங்கிலாந்தில் வாழும் மற்றைய தமிழ் அமைப்புகள் சார்பாகவும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருக்கு மகஜர் ஒன்று கொடுக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னுடைய அழுத்தங்களைப் பயன்படுத்தி இலங்கையில் இனப்படுகொலையை நிறுத்த வேண்டும் என்றும் —

இவற்றுக்கெல்லாம் காரணமாக இருக்கும் இராணுவத்தைத் தமிழர் பகுதிகளில் இருந்து விலக்கும்படியும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

பேரணியில் சென்ற இலங்கைத் தமிழர் ஒருவர் பி.பி.சி.யின் சிங்கள சேவைக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப படையினரின் தரை வழிப் பாதை என்னவாம்...!

## படையினரின் நிலைகள் மீது நெடுங்கேணியில் ஷெல் வீச்சு

கொழும்பு, ஜூலை 27

நெடுங்கேணியில் பாதுகாப்பு நிலைகளில் உள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதேசமயம் விமானப் படை ஹெலிக்கொப்டர்களும், பீரங்கிப்படைகளும் விடுதலைப் புலிகளின் இடங்களைக் கண்டுபிடித்து தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

"வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதே சமயத்தில் படையினர் தாம் கைப்பற்றிய நிலைகளை தொடர்ந்தும் பலப்படுத்திவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## மானிப்பாயில் கிளைமோர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 27

மானிப்பாய் உடுவில் வீதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் படையினர் வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் படை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 'குட்வில் கைட்' பயணிகள் கப்பல் நேற்று திருமலை வந்து சேர்ந்தது

## காங்கேசன் புறப்படும் திகதி குறித்து முடிவுஇல்லை

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலை — காங்கேசன்துறைப் பயணிகள் சேவையை மேற்கொள்வதற்காக வாடகைக்குப் பெறப் பட்ட 'குட்வில் கைட்' என்ற கப்பல் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கொழும்பிலிருந்து திருகோணமலைத் துறைமுகம் வந்துசேர்ந்தது.

இருப்பினும் இக்கப்பலில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்குத் தேவையான 'கடலில் பயன்படுத்தத் தக்கது' என்ற சான்றிதழைக் கொழும்பிலுள்ள கப்பற்றுறை மதிப்பீட்டாளரிடமிருந்து பெறாமலேயே இக்கப்பல் திருமலை வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இன்று திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் எஸ். வேலும்மயிலும் துறைமுக அதிகாரியுடன் சென்று கப்பலைப் பார்வையிடவுள்ளார். அதன்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புப் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு இருதயபுரம் பகுதி வியாழக் கிழமையன்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

ஆண்கள், பெண்கள் அனைவரும் இருதயபுரம் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதிக்கப் பட்டன. சந்தேகத்துக்கு இடமானவர்கள் விசாரிக்கப்பட்டனர்.

அனுமதியின்றி இப்பகுதியில் தங்கியிருந்த வெளியார் சிலர் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு புளியந்தீவின் ஒரு பகுதி கடந்த புதனன்று இரவு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

மட்டக்களப்புபஸ்நிலையத்துக்கு அனைவரும் கொண்டு செல்லப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப் பட்டனர். இரு இளைஞர்கள் மேலதிக விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

இராணுவத்தின் விசேட படையணிப் பிரிவே இத்தேடுதலை நடத்தியது. (இ-4)

# கடமைக்கு வராத படையினரை தேடி நாளை முதல் வேட்டை!

## மன்னிப்புக் காலக்கெடு நேற்று இரவுடன் முடிவு

கொழும்பு, ஜூலை 27

இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவர்களை கைது செய்வதற்கென இராணுவத்தினரும் பொலீஸாரும் நாளை திங்கட்கிழமை முதல் கூட்டாகத் தேடுதல்களை மேற்கொள்வார்கள்.

இராணுவத் தளபதி விடுத்த வேண்டுகோளுக்கமைய இப்படியானோருக்கு இம்மாதம் 21 ஆம் திகதி வரை பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த மன்னிப்புக் காலக்கெடு நேற்று நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்தோர் முகாம்களில் குழாய்க் கிணறு நிறுவப்படும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்களிலுள்ள மக்களின் நலன் கருதி 3குழாய்க் கிணறுகள் நிறுவப்படவுள்ளன. நவாலியிலுள்ளபுலவர்முகாம் மானிப்பாயிலுள்ள பிப்பிலி முகாம், மானிப்பாயிலுள்ள கேவலன் காமம் முகாம்ஆகியவற்றிலேயே இந்த குழாய்க் கிணறுகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இதே வேளை - மானிப்பாய் சந்தைப் பகுதியிலும் நவாலி சந்தைப் பகுதியிலும் ஆனைக் கோட்டை - மானிப்பாய் பிரதான வீதியிலுள்ள சிறுவர் பூங்கா மற்றும் புக்கை தின்னி பிள்ளையார் கோயில் ஆகியவற்றிற்கு சமீபமாகவும் மேலும் மூன்று குழாய்க் கிணறுகள் நிறுவப் படவிருப்பதாக வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ஐ - 135)


## வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்
## பொன்விழா நிறைவு நிகழ்வுகள்

**காலம்:** 27-07-97 இன்று காலை 9 மணி
28-07-97 நாளை பி. ப. 1 மணி

**இடம்:** உரும்பராய் இந்துக் கல்லூரி மண்டபம்

**தலைமை:** திரு. ஆ. சி. நடராஜா (அதிபர்)

**முதலாம் நாள்**

பிரதம விருந்தினர்: துணைவேந்தர் பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
சிறப்பு விருந்தினர்:
திரு. சு. இரத்தினராசா அவர்கள்
(கல்விப்பணிப்பாளர் வலயம் I)

**பட்டிமன்றம்**

"மாணவர்களை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்ற வேண்டியது பாடசாலையா? குடும்பமா?

நடுவர்: பேராசிரியர்
நா. சுப்பிரமணியன் அவர்கள்
(தலைவர் தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

வாதிடுவோர்:
திரு. கோ. சி. வேலாயுதம்
திரு. சோ. பத்மநாதன்
திரு சு. செல்லத்துரை
திரு. சிவ.மகாலிங்கம்

**மலர் வெளியீட்டுரை**

திரு நா. வரதராஜன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

★ ஆசிரியர், மாணவர் கலை நிகழ்ச்சிகள் இருநாள்களும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(48609)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி காசிப்பிள்ளை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நாவலப்பிட்டியை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி காசிப்பிள்ளை அவர்கள் 25-7-97 இல் நாவலப்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கம் – தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், தெட்சணாமூர்த்தி (யாழ். மாநகரசபை நீர் விநியோகப் பகுதி), சவுந்தலாதேவி (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), Dr உருத்திராதேவி (Base Hospital, Nawallapitiya), சித்திரா தேவி, சத்தியமூர்த்தி, (B Com, ஆசிரியர், Trinity College, Kandy), தயாபரன், கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசுப்பிரமணியம், நடராசா, திருமதி சி. சர்வானந்த தேவி, செல்வரட்ணம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தெ. சறோஜினிதேவியின் அன்பு மாமியும், அருட்குமார், வசீதரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கா. தெட்சணாமூர்த்தி
(மகன்)

10/10, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம்.

(48614)

## திருமதி சத்தீஸ்வரி கனகரத்தினம்
(கைதடி கிழக்கு, கைதடி)

கைதடி கிழக்கு திருமதி சத்தீஸ்வரி கனகரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் கைதடி கிழக்கு, கதிர்வேலவன் அரிசி ஆலை உரிமையாளர் சின்னையா கனகரத்தினத்தின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு. சத்தீஸ்வரன்
(சகோதரன்)

கைதடி கிழக்கு,
கைதடி.

(486[illegible])

# சிறுதொழில் கடன் உதவி

நல்லூர், ஜூலை 27

தனிநாயக அடிகளார் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு சிறு தொழில் முயற்சிக்கென கடன் உதவிகளை வழங்கவுள்ளது.

ஏற்கனவே கடன் உதவிகளைப் பெற்றவர்கள் தமது கடன்களை மீளச் செலுத்தி இருந்தால் அவர்களுக்கும் மீண்டும் கடன் உதவிகள் வழங்கப்படும் என சங்கத் தலைவர் வே. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ஐ-103)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் "இலக்கியமும் திறனாய்வும்" என்ற தலைப்பில் அங்கு உரையாற்றுவார். (ஐ)

# மந்திகையில் தொழுநோய் சிகிச்சை

யாழ்ப்பாணம் ஜூலை 27

தொழுநோய் மற்றும் சரும நோய்களுக்கான சிகிச்சை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் (மந்திகை) நாளை திங்கட்கிழமை காலை 8மணி முதல் 11மணி வரை மனநோயாளர் சிகிச்சைப் பிரிவு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் சிகிச்சை தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நான்காவது திங்கட்கிழமைகளில் அங்கு நடைபெறும் என்று சுகாதார சேவைகள் பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்- [ஐ]

# விதவைகளுக்கு தையல் இயந்திரங்கள்

சண்டிலிப்பாய், ஜூலை 27

வலி தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் குடும்பத் தலைவரை இழந்த 18 விதவைப் பெண்களுக்கு 18 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தையல் இயந்திரங்களைப்பெற்றுக் கொண்டவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சுழற்சிக் கடனடிப்படையில் தலா 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தையலுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

(ஐ-135)

# உரும்பிராயில் 400 வீடுகளுக்கு மின் வசதி

உரும்பிராய், ஜூலை 27

மின் விநியோகத்துக்காக உரும்பிராய்ப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள ஜெனரேற்றர் மூலம் அப் பகுதியில் உள்ள 400 வீடுகளுக்கு மின் வழங்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மின் பாவனையாளர்கள் அதைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் மேலும் 50 வீடுகள் மின் வசதி பெறவாய்ப்புண்டு என மின் அத்தியட்சகர் ஏ. நாகராசா தெரிவித்தார். (ஐ-154)

# 20 ஆயிரம் அ. அட்டைகள் விநியோகம்

சண்டிலிப்பாய், ஜூலை 27

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 20 ஆயிரத்து [illegible] அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-135)

# தளபாட வசதியின்றி இயங்கும் பண்டத்தரிப்பு தபாலகம்

சண்டிலிப்பாய், ஜூலை 27

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் தளபாடங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. தளபாட தட்டுப்பாட்டினால் தபால் அலுவலக ஊழியர்கள் நிலத்தில் இருந்தே கடிதங்களைத்தரம் பிரிக்கின்றனர்.

பல உப தபாலகங்களை உள்ளடக்கியதான இப் பிரதான தபால் அலுவலகத்தில் மேசை, கதிரை என்பன போதியளவு இல்லாதிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. (ஐ-135)


## அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவுகள்

LEO CLUB
OF
MANIPAY PARISH

WE SERVE

LEO CLUB இன் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பானது கடந்த சனிக்கிழமை (26-07-1997) அன்று மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்ட இலக்கங்களின் விவரம் வருமாறு:-

| விவரம். | இலக்கம். |
|---|---|
| 1 ஆம் பரிசு | 6778 |
| 2 ஆம் பரிசு | 9794 |
| 3 ஆம் பரிசு | 0694 |

ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 4920 | 8403 | 4990 | 6136 |
| 0178 | 3480 | 4842 | 9627 |
| 1852 | 7011 | 4084 | 2217 |

மேற்படி இலக்கங்களுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் 10-08-1997 க்கு முன்னர் லியோ கழக உறுப்பினர்களையோ அல்லது மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. C. கேசவராஜன் அவர்களையோ தொடர்பு கொள்வதன் மூலம், அப் பரிசில்களை 16-08-1997 சனிக்கிழமை அன்று மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.

LEO CLUB OF
MANIPAY PARISH.

[48616]


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
பசுபதி சசீந்திரனின்

அன்புத் தாயார் மறைந்த செய்தியைக் கேள்வியுற்று நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

O/L வகுப்பு மாணவர்கள்,
யா/உயரப்புலம் மெ. மி. த. க. வித்தியாலயம்.

(47350)


## வாசகர்க்கு வாய்ப்பு!

★ தென் இந்திய புத்தகங்கள் விற்பனையாகின்றன!
★ தமிழ், இலக்கியம், சிறுகதை, சமயம், நாவல்,
★ சிறுவர்களுக்கான கதைகள், ஈழத்து நாவல்கள்,
★ பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(48618)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்/பல்கலைக்கழக விஞ்ஞானபீட உயிரியல் பிரிவு முதலாம் வருட [95/96] கல்வியாண்டு மாணவன்
கிருஷ்ணேந்திரனின் [கண்ணன்]
தந்தையார்
அமரர் சி. சந்திரன்

அவர்களின் திடீர் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விஞ்ஞானபீடம்
உயிரியல் பிரிவு மாணவர்கள் [95/96]

[48613]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகாலாந்தில் போர் நிறுத்தம்

## அடுத்த 3 மாதங்களுக்கு

புதுடில்லி, ஜுலை 27

இந்தியாவில் பிரச்சினைக்குரிய வட கிழக்கு மாநிலங்களில் ஒன்றான நாகாலாந்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மூன்று மாத காலத்துக்கு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரவுள்ளது.

பிரதமர் ஐ. கே. குஜ்ரால் நேற்று முன் தினம் இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டார்.

நாகாலாந்தில் உள்ள முக்கிய கிளர்ச்சிக் குழுக்களும் இந்த யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் பின்னர் இந்தப் போர் நிறுத்த இணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

யுத்த நிறுத்த இணக்கம் தொடர்பாக நாகாலாந்தில் சக்தி வாய்ந்த கிளர்ச்சிக் குழுவான தடைசெய்யப்பட்ட ''நாகாலாந்து தேசிய சோஷலிசக் கவுன்ஸிலின்'' தலைவரான ஐஸாக் முய்வாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக பிரதமர் குஜ்ரால் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஒன்று கடந்த மாதம் ஜெனீவாவில் இடம்பெற்றது. மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி அடிப்படையிலான தீர்வுத்திட்டம் ஒன்றை இந்திய அரசு இப்பேச்சின் போது முன்வைத்தது அதனையடுத்து நாகா கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை நிறுத்திவைக்கச் சம்மதித்ததை அடுத்து இந்த யுத்த நிறுத்த இணக்கம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள இந்தப் போர் நிறுத்த இணக்கம் நாகாலாந்து தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் குஜ்ரால் கூறியுள்ளார்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்ததும் நாகாலாந்து கிளர்ச்சியாளர்களும், இந்திய இராணுவத்தினர் மற்றும் மாநில அரச படையினரும் தத்தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் மத்திய அரசுக்கு எதிரான போராட்டம் அங்கு முதன் முறையாக நாகாலாந்து மாநிலத்திலேயே ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக நீடித்து வந்த நாகாலாந்து மக்களின் போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

மியான்மர் நாட்டின் எல்லையோரம் அமைந்துள்ள நாகாலாந்தில் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்களாவர்.

(ஐ-5)

# பணயக்கைதிகளை விடுவிக்க வீரப்பன் 10 நாள் காலக்கெடு

சென்னை, ஜுலை 27

தனக்கும் தனது சகாக்களுக்கும் இன்னும் 10 நாட்களுக்குள் பொதுமன்னிப்பு வழங்குவது பற்றி அறிவிக்காவிட்டால் தான் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் கர்நாடகவனத்துறை அலுவலர்களைக் கொன்று விடப் போவதாகச் சந்தன மரக் கடத்தல் காரன் வீரப்பன் அச்சுறுத்தியிருக்கிறான்.

வீரப்பனை காட்டில் சென்று சந்தித்து விட்டு வந்த நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால் கடந்த வியாழன் சென்னையில் செய்தியாளரிடம் இதனைத்தெரிவித்தார்.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக ஏற்கனவே தெரிவித்திருந்த 10 கோரிக்கைகளையும் தமிழ்நாடு, கர்நாடக மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் வீரப்பன் பிடிவாதமாக இருப்பதாக அவர் கூறினார்.

வீரப்பன் அனுப்பிய வீடியோ படத்தை பார்த்த தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இது குறித்து தான் டில்லி சென்று திரும்பிய பின் கர்நாடக முதலமைச்சருடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்ததாக கோபால் கூறினார்.

இப்பிரச்சினையில் தமிழக அரசின் முடிவை இம்மாத இறுதிக்குள் வானொலி மூலம் தெரிவிக்க வேண்டும் என்று வீரப்பன் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

வீரப்பன் பிடித்து வைத்திருக்கும் 9 வனத்துறை அலுவலர்களும் நலமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே இப்பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக கர்நாடக மாநில காவல் துறைத்தலைவர் சென்னை வந்துள்ளார்.

சரணடைவதற்கு வீரப்பன் விதித்திருக்கின்ற நிபந்தனைகளில் தனது வாழ்க்கை ஒரு திரைப்படம் ஆக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

(இ-4)

## அமெரிக்கா நெருக்குதல் கொடுக்கும்

நியுயோர்க், ஜுலை 27

கம்போடியாவில் கூட்டரசாங்கம் நிலை கொள்வதற்காக அமெரிக்கா ஹுன்சென்னுக்கு நெருக்குதல் கொடுக்கும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மடலின் அல்பிரைற் தெரிவித்துள்ளார்.

மியான்மர் நாட்டை நல்வழிக்கு இட்டுச் செல்வதற்கு 'ஆசியான்' அமைப்பு முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளரே.

(ஐ)

# பெரு அதிபருக்கு புதிய நெருக்கடி!

லீமா, ஜுலை 27

பெரு அதிபர் அல்பேர்ட்டோ பிஜுமோறிக்கு எதிர்பாராத கோணத்தில் இருந்து புதிய ஆபத்து ஒன்று உருவாகியுள்ளது.

அவரது பெற்றோர் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் —

அவர்கள் 1938 ஆம் ஆண்டு பெருவில் குடிபுகுந்தவர்கள் எனவும் — அப்போது பிஜு மோறி 10 வயதுச் சிறுவனாக இருந்தார் எனவும் இதனால் அவரது பூர்வீகப் பிறப்பிடம் ஜப்பான் எனவும் — பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் அதிர்ச்

உலக அரங்கில்

சியளிக்கும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

பத்திரிகைத் தகவல்களுக்கு ஏற்ப அவரது பிறப்புச்சான்றிதழில் பிறப்பு இடம் அழிக்கப்பட்டு லீமா என திருத்தப்பட்டு எழுதப்பட்டுக் காணப்படுகின்றது.

பெரு அரசமைப்புச் சட்டப்படி அதிபர் பதவியில் இருப்பவர்கள் அந்நாட்டின் பூர்வீக குடிமகனாக இருக்க வேண்டும் என்பது கட்டாய விதியாகும்.

பிஜு மோறி ஜப்பானில் பிறந்தவர் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர் அதிபர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இதேவேளை — பிஜு மோறி பெருவில்தான் பிறந்தவர் என்பதை நிரூபிக்கும் ஆதாரமாக அவரது பிறப்புச் சான்றிதழை அவரது வழக்கறிஞர் சாம்றோஸ் பியன்டர்ஸ் பத்திரிகைகளுக்கு விநியோகித்துள்ளார்.

தீவிர ஜப்பானிய ஆதரவுக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் அதிபர் பிஜுமோறியின் சர்வாதிகாரப் போக்கினால் உள்நாட்டில் அவருக்கு எதிர்ப்பு உருவாகி வருவது தெரிந்ததே.

'கொக்காகோலா' பற்றிய

# ரீ. வி. விளம்பரத்தைப் பார்த்து சாகஸம் புரிந்த சிறுவன் மரணம்!

## இந்தியாவில் இரண்டாவது சம்பவம்

கல்கத்தா, ஜுலை 27

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும்' கொக்கா கோலா' விளம்பரத்தில் தோன்றும் வீரனைப்போன்று சாகஸம் செய்ய முயன்ற 10 வயதுச் சிறுவன் ஒருவன் கழுத்து நெரியுண்டு உயிரிழந்தான்.

கல்கத்தாவைச் சேர்ந்த 4 ஆம் வகுப்பு மாணவனான பிரபால் சஹா என்ற சிறுவனே இவ்வாறு பலியானான்.

'கொக்காகோலா' விளம்பரத்தை தினமும் ரசித்துப் பார்த்து வந்த இச்சிறுவன் அக் காட்சியில் தோன்றும் வீரனைப் போன்று உயரத்தில் இருந்து குதித்து சாகஸம் செய்ய விரும்பினான். நீண்ட சேலையை வயிற்றில் கட்டி அதன் ஒரு முனையை உயரத்தில் உள்ள கம்பி ஒன்றுடன் இணைத்துவிட்டு உயரமான ஓரிடத்தில் நின்று அவன் குதித்துள்ளான். வயிற்றில் கட்டப்பட்டிருந்த சேலைத்தடம் நழுவி அவனது கழுத்தில் சுருக்கிடவே அவன் துடிதுடித்துப் பலியானான்.

இந்தியாவில் 'கொக்கா கோலா' விளம்பரத்தைப் பார்த்து அதன்படி சாகஸம் புரிந்த சமயம் பலியான இரண்டாவது சிறுவன் இவனாவான்.

இச் சம்பவங்களை அடுத்து தொலைக் காட்சியில் அந்த ''கொக்காகோலா'' விளம்பரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

காபூல் நோக்கி முன்னேறி வரும்

# எதிரணிக்கு ஆதரவு தெரிவித்தோர் தலிபான்களால் சிறைபிடிப்பு!

காபூல், ஜுலை 27

காபூல் நகரை நோக்கி முன்னேறி வரும் தலிபான் எதிர்ப்புப் படைகளுக்கு ஆதரவு தெரிவித்த சுமார் 2 ஆயிரம் பேர் தலிபான் படையினரால் சிறை வைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தகவல் வெளியிட்டுள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டோர் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை—

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து 45 வெளிநாட்டுத் தொண்டு நிறுவன ஊழியர்கள் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் பாதுகாப்புடன் பாகிஸ்தான் எல்லைக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

காபூலை நோக்கி விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கும் தலிபான் எதிரிப் படையினரிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையில் தலிபான்கள் ஈடுபட்டுள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில்- கடந்த 10 வாரங்களாக எதிரிப்படையிடம் கைதியாக இருந்த தலிபான் படையின் மூத்த தளபதி மூல்லா முகமது கௌஸ் விடுவிக்கப்பட்டு உள்ளார்- என தலிபான் அறிவித்துள்ளது.

(ஐ-5)

இந்திய உபஜனாதிபதிப் பதவி:

# அரசு சார்பு வேட்பாளராக ஆளுநர் கிருஷ்ணகாந்த் தெரிவு

புதுடில்லி, ஜுலை 27

இந்தியாவின் உப ஜனாதிபதிப் பதவிக்கு ஆளும ஐக்கிய முன்னணி, மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆந்திரா மாநில ஆளுநர் கே. கிருஷ்ணகாந்த் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இதேவேளை— உப ஜனாதிபதிப் பதவிக்கு எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி சுர்ஜித்சிங் பர்னாலாவை தனது தரப்பு வேட்பாளராக அறிவித்திருக்கிறது.

இதனால் உப ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டி ஏற்பட்டிருப்பதால் அதற்குத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவை ஏற்படின் அடுத்த மாதம் 16 ஆம் திகதி தேர்த நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 18 பேர் உப ஜனாதிபதிக்கான தேர்தல் களத்தில் வேட்பாளர்களாகக் குதித்துள்ளனர்.

உப ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதி நாள் நேற்றாகும்.

(ஐ)

## குஜ்ரால் உறுதிமொழி

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருவது பற்றி இலங்கை அரசிடம் தாம் எடுத்துக் கூறவிருப்பதாக பிரதமர் குஜ்ரால் முதலமைச்சர் கருணாநிதியிடம் உறுதியளித்துள்ளார்.

புதுடில்லியில் முதல்வர் கருணாநிதி பிரதமர் குஜ்ராலைச் சந்தித்து இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொலை செய்யப்படுவது பற்றி முறையிட்ட போது பிரதமர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

# கிழக்கு ஜேர்மனியில் ஆறு பெருக்கெடுப்பு!

பொன், ஜுலை 27

மத்திய ஐரோப்பாவை பாதித்துள்ள கடும் மழையினால் ஜேர்மனியில் மிக மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கிழக்கு ஜேர்மனியில் பிரான்டென்டர் மாநிலத்தில் ஹோவர் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் கரைகளை உடைத்துக்கொண்டு குடியிருப்புகளுள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அப்பகுதியின் ஆலயமணிகள் அபாய ஒலி எழுப்பின. அபாய சங்குகள் ஊதப்பட்டன; மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்று விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனையடுத்து நேற்று முன்தினம் இரவோடிரவாக 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறினர்.

(ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் யாழ். நகரில்!

## ஜெயா அழகு மாடம்

**(JEYA FANCY)**
**127, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
என்ற முகவரியில் இயங்குகின்றது.

(48536)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 14 – 08 – 1929

உதிர்வு: 27 – 06 – 1997

### விநாசித்தம்பி கந்தையா

எங்கள் குடும்பத்தின் ஒளிச்சுடரே!
எம்மையெல்லாம் அரவணைத்த அன்புத்தெய்வமே!
இடைநடுவில் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ?

எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

27. 07. 97 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விடத்தற்பளை. (48546)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சிதம்பரப்பிள்ளை திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற (F) போமன் - இலங்கை மின்சாரசபை)

தோற்றம்: 09—10—1934

மறைவு: 27—06—1997

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்ப ஒளிவிளக்காய்! எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே ஐயா! உங்கள் உயிர் பொய்யான உடலை விட்டுத்தான் மறைந்தாலும் எங்கள் இதயங்களோடு நின்று பேசுதையா! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம் ஐயா!

அன்பு ஐயாவின் அந்தியேட்டிக் கிரியை இன்று 27 - 07 - 1997 ஞாயிற்றுக்கிழமை இல 477/B/7 தெமட்டகொட றோட், கொழும்பு - 9 என்ற முகவரியில் நடைபெறுகின்றது.

• குடும்பத்தினர்

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

(48522)

## நேர்முகப் பரீட்சைக்கு செல்வோருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

1995 ஆம் ஆண்டு இடம் பெற்ற தடடெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 41 பேருக்கும் கொழும்பு செல்ல போக்குவரத்து வசதி செய்து கொடுக்க யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் —

தற்போது போக்குவரத்து பிரச்சினையுள்ளதால் போக்குவரத்து வசதி செய்வதில் கூடுதல் புள்ளி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும்-அவர் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-5)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். ஆஸ்பத்திரியில் சாவகச்சேரிப் பொலீஸாரால் கடந்த வியாழன் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் ஒப்படைக்கப்பட்ட சடலம் நேற்று முன்தினம் இனங் காணப்பட்டது.

மட்டுவில் தெற்கு மருதங்குளத்தைச் சேர்ந்த சின்னப்பொடி கிருஷ்ணன் (வயது55) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவதினம் காலை 8-00 மணிக்கு இனந்தெரியாத சிலர் இவரை வீட்டிலிருந்து அழைத்துச் சென்றதாகவும்- காலை 10-00 மணிக்கு அவர் வீதியில் சடலமாகக் காணப்பட்டதாகவும்-

உறவினரால் தெரிவிக்கப்பட்டது-

நேற்று நடந்த மரணவிசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(உ-15)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் எழுதுவினைஞராகக்கடமையாற்றும்
செல்வி து. சாரதாவின் அன்புத்தாயார்


### திருமதி மகேஸ்வரி துரைராஜா

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா / யூனியன்கல்லூரி,
யா/பொன். பரமானந்த ம. வி.,
தெல்லிப்பழை.

(48598)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரஸ்வதி சேனாதிராசா

''ஆனந்த சபா'' அளவெட்டி

திருவவதாரம்: 27—02—1935

திருவருட்பேறு: 31—07—1994

திதி:- ஆடி அபரபக்க அட்டமி- 27—07—1997

அளவை
கும்பளாவளைப் பிள்ளையார் துணை முன்நிற்க,
ஆருயிரே! அம்மாவே!
இன்றல்ல, என்றென்றும் உம்மை
நினைந்து நினைந்துருகும் யாம்,
''காண்கின்றோம் கயிலையினிற் சிவபெருமான்
கழலடிக் கீழ் நீர் இருக்க,
காண்கின்றோம் நீர் மலர் தூவி
அர்ச்சிக்கும் கோலக் காட்சி''

மீளாத்துயருடன்:
அன்புக்கணவர், மகன்,
மகள்மார், மருமக்கள்.

''சிவவில்லா''
மானிப்பாய்.

(48571)

## நகரசபை, சாவகச்சேரி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுள் முதலாவது வேலைக்கான கேள்விகள் ''இற்ராட்''டில் ரூபா 5,00,000/-க்கு பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்தும், ஏனைய வேலைகளுக்கான கேள்விகள் அதே நிறுவனத்தில் ரூபா 3,00,000/-க்கு பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்தும் 15 - 08 - 97 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே தினம் முற்பகல் 10-15 மணிக்குக் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

| வேலை விவரம் | வைப்புப் பணம் ரூபா | படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. பொதுச்சந்தை வாழைப்பழக் கொட்டகை அமைத்தல் | 1,000/- | 500/- |
| 2. பொதுச்சந்தையில் மலகூடம் அமைத்தல். | 1,000/- | 500/- |
| 3. கொல்களம் திருத்த வேலை | 1,000/- | 500/- |
| 4. அலுவலகத் தளபாடம் வழங்கல் | 1,000/- | 500/- |
| 5. நவீன சந்தைக் கட்டட பிரதான வாயில், மக்கள் வங்கிக் கட்டட உள்ளக தட்டைச் சிற் பொருத்துதல் | 1,000/- | 500/- |
| 6. புதிய வீரபத்திரர் வீதி, கிரவலிடுதல் திருத்த வேலை | 1,000/- | 500/- |
| 7. தாளையடி அம்மன் 2 ஆம் ஒழுங்கை ஊரி இடுதல் | 1,000/- | 500/- |
| 8. கேணியடி வடக்கு ஒழுங்கை கிரவலிட்டு திருத்த வேலை | 1,000/- | 500/- |

மேற்படி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணங்களையும் இவ் அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் 11 - 08 - 97 ஆம் திகதி 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.

சித்திர கேள்விக்காரர் உடன் படிக்கையில் கைச்சாத்திட்டதும் வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுகொள்ளலாம்.

சி. நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 24 - 07 - 97

(சி-1205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வு

சந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற உள்ளன.

இதில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலிட்டாடு ஞானமுருகன் கழகமும், யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் கழகமும் மோதவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டிகளைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம் பெறும். (ஐ-152)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1997-08-20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக விரிவுரையாளர்:-
   வியாபார நிருவாகம்
   வர்த்தகம்
   பொருளியல்
   சமூகவியல்
   அரசறிவியல்
   கணிதமும் புள்ளி விவரவியலும் (சமூக புள்ளி விவரவியலில் சிறப்புத் தேர்ச்சி)
   நுண்கலை
   நாடகமும் அரங்குக் கலைகளும்
   வரலாறு
   புவியியல்
   கிறிஸ்தவ நாகரிகம்
   மெய்யியல்
   சமஸ்கிருதம்
   ஆற்றுகைக்கலை - கர்நாடகசங்கீதம்/வாய்ப்பாட்டு
   ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம் / பண்ணிசை
   ஆற்றுகைக்கலை - கர்நாடகசங்கீதம்/வாத்தியங்கள் - வீணை / வயலின் மிருதங்கம்
   ஆற்றுகைக்கலை- (நடனம்) பரதநாட்டியம்.
   ஆற்றுகைக்கலை - நடனத்திற்கான வாய்ப்பாட்டு (பரதநாட்டியம்)
   ஆற்றுகைக்கலை - நடனத்திற்கான மிருதங்கம் (பரதநாட்டியம்)
   ஆங்கில இலக்கியம்
2. தற்காலிக கட்டுரை ஆசிரியர்:-
   வரலாறு
   புவியியல்
3. தற்காலிக போதனாசிரியர்:-
   ஆங்கிலம் தரம் 11
   பரதநாட்டியம்
   மிருதங்கம்
   கர்நாடக சங்கீதம்-(வாய்ப்பாட்டு)
4. இடை வரவு விரிவுரையாளர்:-
   வர்த்தகம் - வர்த்தகத்தொழிற் சட்டம்/தொழிற் சட்டம்
   கணக்காய்வு
   வரிவிதிப்பு
   வியாபார நிருவாகம் - சட்டச் சூழல்
   வங்கியியலும் நிதியியலும்
   கணிதமும்
   புள்ளிவிவரவியலும்
   பொதுத்துறை கணக்கியல்
   கணனி
   உயர் கணக்கியல்
   மெய்யியல் - பொது சமூக உளவியல் அரசறிவியல்/கணிதமும் புள்ளிவிவரவியலும்
   பிரான்சிய மொழி
   ஆங்கில (இலக்கியம்)
   கட்டடக்கலை /சிற்பக்கலை/ஓவியம்தீட்டுதல்
   கிறிஸ்தவ நாகரிகம் - பழைய ஏற்பாட்டியல்
   புதிய ஏற்பாட்டியல்
   இலங்கைத் திருச்சபை வரலாறு
   கிறிஸ்தவ மெய்யியல்
   கிறிஸ்தவ வழிபாட்டியல்
   நாடகமும் அரங்குக் கலைகளும் - அரங்க வரலாறு
   தயாரிப்பு முறை - நடிப்புக் கொள்கை
   இந்திய அரங்கு
   ஆகியன கற்பித்தற்கு
5. இடை வரவுப் போதனாசிரியர்:-
   கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)
   பண்ணிசை
   வயலின்
   வீணை
   நடனம்

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக விரிவுரையாளர்:

ரூபா 8, 833. 75 (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக கட்டுரை ஆசிரியர்:

ரூபா 6, 980. 83 (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக போதனாசிரியர் தரம் 11 (ஆங்கிலத்தில்)

ரூபா 7, 650. 00 (நிலையானது) மாதமொன்றுக்கு.

தற்காலிக போதனாசிரியர்:

(பரத நாட்டியம் / மிருதங்கம்/கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)

ரூபா 6, 620. 83 (நிலையானது) மாதமொன்றுக்கு பட்டதாரி

ரூபா 6, 397. 50 (நிலையானது) மாதமொன்றுக்கு பட்டதாரி அல்லாதோர்.

இடை வரவு விரிவுரையாளர்:

ரூபா 300. 00 மணிக்கு.

இடை வரவுப் போதனாசிரியர்:

ரூபா 150. 00 மணிக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- ஐ செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேட்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 2.50 முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997-07-24

(சி/1201)

### மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க

# இலங்கை நோக்கிப் படையெடுக்க தமிழ் நாடு மீனவர்கள் திட்டம்!

சென்னை, ஜூலை 27

அப்பாவித் தமிழர்களை சுட்டுக் கொன்றும், தமிழக மீனவர்கள் மீது வெறித் தாக்குதல்களை நடத்தியும் வரும் இலங்கைப்படைகளைத் தடுக்க எவருமே முன்வரவில்லை. எனவே நாங்களே இலங்கையை நோக்கிப்படையெடுத்துச்சென்று அவற்றைத்தடுத்து நிறுத்தப்போகிறோம்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது தமிழ்நாடு மீனவர் பேரவை.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி இலங்கையை நோக்கித் தாம் படகுகளில் புறப்படவுள்ளதாக மீனவர் பேரவை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மீனவர் பேரவைத் தலைவர் அன்பழகன் விடுத்த அந்த அறிகைக்யில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழக மீனவர்களை சிங்கள கடற்படையினர் தொடர்ந்து காக்கை, குருவிகளை சுடுவது போலச் சுட்டு சாகடிக்கின்றனர். தமிழக அரசு அறிக்கைவிட்டு சமாதானம் ஆகிவிடுகிறது. கையாலாகாத மத்திய அரசு சிங்கள ராணுவம் மீனவர்களை சுட்டுக்கொல்வதைக் கண்டித்து ஐக்கிய நாட்டு சபையில் மனித உரிமைக் கழகத்தில் கூட இதுவரை முறையிடவில்லை.

மத்திய மாநில அரசுகளே தமிழக மீனவர்கள் என்ன இரண்டாம்தர குடிமக்களோ? தட்டிக்கேட்க நாதியில்லாத அனாதை இந்தியர்களா? அல்லது சிங்கள கடற்படை துப்பாக்கிப் பயிற்சி பெறும் இலக்குகளா?

இனி நாங்கள் உங்களை நம்பிப் பயனில்லை. உங்களால் எங்கள் உயிருக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டோம். எனவே எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்ள இலங்கை ராணுவத்துடன் நேரடியாக பிரகடனம் செய்கிறோம். வரும் 4-8-97 திங்கட்கிழமை தமிழக கடலோரங்களில் உள்ள அனைத்து விசைப்படகு, கட்டுமரம், வள்ளம், வத்தல் அனைத்தும் இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து காலை 9 மணிக்கு இலங்கையை நோக்கிப் புறப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

வீழ்ந்தாலும் வாழ்ந்தாலும் தமிழக மீனவர்கள் ஒட்டு மொத்தமாக வாழ்வோம் அல்லது வீழ்ந்து மடிவோம். தவணை முறைப்படு கொலைகளை தடுத்து நிறுத்துவோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## துரையப்பா நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

முன்னாள் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவின் 22 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையினர் ஏற்பாடு செய்துள்ள நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10. 30 மணிக்கு யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராஜா தலைமையில் யாழ். நகரில் முதலாம் குறுக்குத்தெரு 183 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மாவட்டப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சிரார்த்த தினத்தை ஒட்டி மேயர் துரையப்பாவின் உருவப் படத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் எஸ். ரி. தர்மலிங்கம் திரை நீக்கம் செய்து வைப்பார். (ஐ)

## வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில்
தனது 32 வருட சேவையில் 12 வருடங்கள்
பொது முகாமையாளராக இருந்து
சிறந்த சேவையாற்றி இளைப்பாறிச்செல்லும்

### திரு. இராமலிங்கம் பொன்ராஜா

அவர்கள்

சிருஞ்சிறப்புடனும் பல்லாண்டு நல்வாழ்வுவாழ வாழ்த்துகின்றோம்.

கிளைக்குழு உறுப்பினர்களும்,
தனங்கிளப்பு வாழ் மக்களும்.

கிளை இல. 9
தனங்கிளப்பு, சாவகச்சேரி. (சி/1204)

## 21-ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம்: 01-11-1943 மறைவு: 07-07-1997

### அமரர் கனகராஜா பாலேந்திரன்

எமது குடும்பத் தலைவர் அமரர் க. பாலேந்திரன் அவர்களின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் பலவித உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி தங்கபூபதி பாலேந்திரன்
(நல்லூர் சாதனா பாடசாலை- கணித ஆசிரியை)
பா. சுகன்யா [மகள் — சுண்டுக்குளி மகளிர் மாணவி]

30, கன்னார லேன்,
நல்லூர்.

[48608]

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



மலர்வு: 01 — 08 — 1933
உதிர்வு: 27 — 07 — 1996

### Dr. A. L. ABRACAM (CANUTE)

வைத்திய கலாநிதி

### அ. லி. ஆபிரகாம் (கனியூட்)

எம் கண்களிற்கு உங்கள் உருவம் - சொந்தம்
எம் நெஞ்சிற்கு உங்கள் சிந்தனை - சொந்தம்
எம் இதயத்திற்கு உங்கள் அன்பு வார்த்தை - சொந்தம்

"உயிர் உள்ளவரை எம்மை நேசித்தீர்
மரணத்திலும் உம்மை நாம் மறவோம்"

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன்.

106, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(48610)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இல. 358/8, நாவலர் வீதியிலுள்ள 4 பரப்புக்காணியும் வீடும் (நாவலர் கலாசார மண்டபத்துக்கு அருகாமையில்) விற்பனைக்குண்டு, மற்றும் கச்சாய், கொடிகாமம் வீதியில் புனித இராயப்பர் தேவாலயத்திற்கு அருகாமையில் அநுமான் புலம் என்னும் குடியிருப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. சிவலோகநாதன், உசன், மிருசுவில். [48563]

சாவகச்சேரி சந்தையில் இருந்து கச்சாய் வீதியில் கடைக்கட்டடம் விற்பனைக்குண்டு தொடர்பு: 28/14. மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். யாழ்ப்பாணம். [48603]

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [48586]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: No. 68, Old ParkRoad, Jaffna [48590]

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 101, பலாலி வீதி, (இலுப்பையடிச்சந்தி அருகாமை) யாழ்ப்பாணம். [48543]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு, தொடர்பு: இல. 15, மெமோறியல் லேன், மானிப்பாய். [48582]

### கார் விற்பனைக்கு

பாகம் ஆக்கவோ திருத்தி ஓடவோ கூடிய 1 ஸ்ரீ 9161, வொக்ஸ் வேகன் நீலம் விற்பனைக்குண்டு: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [48601]

### தேவை

புதிய, பழையபாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு; R மருதம் 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (48264)

### பிறீமா கோழி

7 மாதம் நிரம்பிய முட்டை இடும் லோமன்இன வெள்ளைக்கோழியும் 5½ மாதம் நிரம்பிய முட்டை இடும் கைலையின் சிவப்பு கோழியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர், உடுவில், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [48606]

## விற்பனைக்கு

28 அடி நீளமான மரத்தினாலான வள்ளம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-

**ஜெயா**
**அழகு மாடம்**
**127, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(48599)

**A/L 99, 98 &**
**G.A.Q. '98**
**(வெளிவாரி)**
**புவியியல்**
**Mr. இக்னேசியஸ்**
**(B. A., புவியியல் சிறப்பு)**
**கிறிஸ்தவம்**
**Mrs.A.மல்லிகா B A.**
**SHAMROCK**
யா/ஈச்சமோட்டை வீதி.

(48602)

### உடன் விற்பனைக்கு

யாழ் நகரில் 3 ஆம், 4 ஆம் குறுக்குத்தெரு சந்தியில் இரண்டு வீடுகள், ஒன்று 5 அறைகளுடன் மற்றையது 4 அறைகளுடன் கார் விடும் கராஜ் வசதியோடு கூடிய, சகல வசதியுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 201/1, 3 ஆம் குறுக்குத் தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [48538]

### தவறிவிட்டது

24-07-97 மாலை யாழ். பல்கலைக்கழக வளாக வளவினுள் அல்லது நேர்சிங் ஹோம் வீதிக்கும் இடையில் எனது பிறவுண் நிற Purse தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பல்கலைக்கழக முகாமைத்துவ தலைவரிடம் அல்லது S. சிறிஸ்கந்தராஜா, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியில் ஒப்படைத்து உதவவும் [48596]

பாலசரஸ்வதி மேலாயுதம ஆகியவரது 448022811X இலக்க தேசிய அடையாள அட்டை யாழ். போதனா வைத்தியசாலைக்கும், யாழ். பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்தயது செய்து ஒப்படைத்துதவுங்கள். தொடர்பு: 6ஆம் கட்டை, கட்டுடை மானிப்பாய். [46605]

### கற்பித்தல்

ஆரம்பக்கல்விக்கான 1 — 5 வரை ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கமைய சகல பாடங்களும் 4 மைல் சுற்றாடலுக்குள் எந்தநேரத்திலும் வீட்டிற்கு வந்து பாடம் கற்பிக்க முடியும். த. இராமநாதன். ஓய்வுபெற்ற ஆசிரியர், வட்டுவினி, இணுவில். [47349]

### மணமகள் தேவை

வயது 29, நட்சத்திரம் மூலம் 2 ஆம் பாதம் ஐரோப்பிய நாட்டில் தொழில்புரியும் மணமகனுக்கு வெளிநாட்டில் அல்லது, உள்நாட்டில் மணமகள் தேவை. கனடாவில் வசிப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: No. B/07 C/o நாதன்கூல்பார், சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/1165)

### O/L MATHS 97

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 32 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [48564]

### திருமண சேவை

33 வயது ஆசிரியருக்கும், 38 வயது கூட்டுறவு முகாமையாளருக்கும் மணப்பெண்கள் தேவை. விவரங்கட்கு ஜாதகத்துடன் நேரில்/ கடித மூலம் தொடரவும். விநாயக திருமணசேவை. 11, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [48604]

### புத்தகப்பிரியர்களே!

உங்கள வாழ்க்கைக்கு பயன் படக்கூடிய பயன்மிகு நூல்களை படித்துப் பயன்பெற விஜயம் செய்யுங்கள்: லிங்லெண்டிங் லைப்ரறி 41 தபாலகவீதி, சாவகச்சேரி. தொடர்பு: லிங்லெண்டிங் லைப்ரறி, சாவகச்சேரி. (48401)

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும், தொடர்பு: R மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48265]

## வாழ்வகம்: புனரமைப்பு கூட்டம்

வலிகாமம்தெற்கு, ஜூலை 27 உடுவில்ஞானப்பிரகாசவீதியில் இயங்கி வந்த விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகம் கடந்த சில காலமாக நிலவி வரும் சீரற்ற சூழ்நிலையால் செயற்படாத நிலையில் உள்ளது. இதனை மீண்டும்செயற்பட வைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கொக்குவில் இந்துக்கல் லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. (ஐ-152)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## பதவி வெற்றிடம்

பதவி - உயிரிரசாயனவியற்றுறைப் பேராசிரியர்.

சம்பள அளவுத் திட்டம்- ரூபா 22, 950 - 6x425 - 25, 500/- (மாதமொன்றுக்கு)

குறிப்பு:-

சம்பளமும் மற்றும் இதரபடிகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 703 ஆம் இலக்க 1997 பங்குனி 4 ஆம் தேதிய சுற்றுநிருபத்துக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு தேதி- 1997 - 10 - 01

விண்ணப்பப் படிவங்களையும் மற்றும் இதர விவரங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23 x 10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 2-50 முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும்.

**- பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997 - 07 - 25

(சி-1202)

## பண்டத்தரிப்பு
## பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
## வாக்காளர் இடாப்பு - 1997

மேற்படி சங்கத்தின் 1997 ஆம் ஆண்டுக்கான கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பு 30-06-1997 உடன் பூர்த்தி செய்யப்பட்டு, சங்க அலுவலகத்திலும், தொழிற்படுகின்ற கிளை நிலையங்களிலும், விசேட கிளை நிலையங்களிலும் அங்கத்தவர்களின் பார்வைக்காக இன்றிலிருந்து 09-08-97 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பில் தன் பெயரைப் பதிவதற்குத் தகுதி பெற்றுள்ள எவரேனும், வாக்காளர் இடாப்பில் தமது பெயர் சேர்க்கப்படாத பட்சத்தில் வாக்காளர் இடாப்பில் தனது பெயரை சேர்த்தற் பொருட்டும்,

அக்கிளையின், பெயர் பதிவு செய்யப்பெற்றுள்ள சங்க அங்கத்தவர்கள் எவரேனும் வாக்காளர் இடாப்பில் ஏதேனும் ஒரு பெயர் காணப்படுவது பற்றிய தமது ஆட்சேபனையையும்,

எழுத்து மூலம் 09—08—97 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் மேன் முறையீடு செய்யலாம்.

ச. செல்வரத்தினம்,
தலைவர்.

ஆ. நாகராசா,
செயலாளர்.

(சி/1206)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் எழுதுநராகக் கடமையாற்றும்
**திருமதி செ. வசந்தராணியின்**
அன்புக் கணவர்

## கந்தர் செல்வராசா

அவர்கள் இயற்கையெய்தியமை கேள்வியுற்று ஆறாத் துயரடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு துயருறும் குடும்பத்தினரின் துயரிலும் பங்கேற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யா/ வட இந்து மகளிர் கல்லூரி,**
**பருத்தித்துறை.**

(48593)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சேனர் கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர், காரணவாய்)

மலர்வு: **29—08—1921**

மறைவு: **13—06—1997**

ஆருயிர்த் தந்தையே! அன்பின் பிறப்பிடமே
பாசத்தின் ஊற்றே பண்பின் திருவுருவே
கல்வியில் சிறந்த ஆசானே
கடமை மிகு குடும்பத் தலைவனாய்
பரிவும் பாசமும் காட்டி எங்களை
வாழவைத்து மீளாப் பயணம் சென்றுவிட்ட
தங்களை மீண்டும் எப்போது காண்போம்?
ஆண்டுகள் பல சென்றாலும் தந்தையே!
உங்களை என்றும் மறவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
சி. மகேந்திரன்,
கரணவாய்.

(48594)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்

## மாறா நிலையா?

வலிகாமம் மக்கள் தென்மராட்சி வடமராட்சிப் பகுதிகளில் இருந்து தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்பிய ஆரம்ப காலத்திலேயே சகலருக்கும் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அரசு அறிவித்தது.

வலிகாமம் பகுதியில் வீடுகள் அப்போதிருந்த நிலையில் அவற்றைத் துப்புரவு செய்து, கிணறு இறைத்து, வேலி அடைத்து, வீடுகள் ஒழுக்கில்லாது திருத்துவதற்கு மிகப் பலருக்கும் பத்தாயிரம் ரூபாவுக்கும் குறையாமல் செலவானது

அவ்வேளையில், மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுக்காகக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 7,500 ரூபா வழங்கப்படும் என்று அரசு ஆசை வார்த்தை கூறியது. ஆனால் பின்னர் உத்தேச கொடுப்பனவு 5,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டது. அந்தப் பணம் விரைவில் வழங்கப்படும் என்றும் நிதி ஒதுக்கப்பட்டு விட்டதாகவும் அடிக்கடி அரசதரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஆனால் மாதக் கணக்காக இழுத்தடிக்கப்பட்டு சொற்ப ஒதுக்கீடே முதலில் கிடைத்தது. ஒரு சில பிரதேச செயலர் பிரிவுகளில் தொட்டது பாதி, விட்டது பாதி என்று மிகக் குறைந்த எண்ணிக்கையானோருக்கே மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கொடுப்பனவு கிடையாது ஏமாந்து, ஏங்கி எதிர்பார்த்திருப்பவர்களில் பணவசதி குறைந்த ஏழைகளும் அடங்குவர். அவர்களில் மிகப் பலர் இந்த ஐயாயிரம் ரூபா எங்களுக்கு இல்லையா?; எங்களுக்குக் கிடையாதா? அரசினரும் உள்ளூர் அதிகாரிகளும் அக்கறையின்றி மறந்து விட்டார்களா? — என்று கேட்டு உதயனுக்கு அடிக்கடி எழுதினார்கள்; எழுதுகிறார்கள்.

உள்ளூர் அதிகாரிகளிடம் கேட்டால் —

வந்த பணத்தைப் பிரித்து வழங்கிவிட்டோம்; பணம் வந்ததும் வழங்குவோம்; பணத்தை அனுப்புமாறு கொழும்பு அதிகாரிகளுக்கு நினைவுபடுத்தி உள்ளோம்; நாம் அதற்கு மேல் என்ன செய்யமுடியும்? — என்ற தோரணையில் பதிலளித்தனர்.

உத்தேச மதிப்பீடுகளின் பிரகாரம் மீளக்குடியமர்ந்தோர் கொடுப்பனவுக்கு 30 கோடி ரூபா தேவை. முதலில் ஆறு கோடி ரூபா கிடைத்து 12,000 குடும்பங்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டது. இப்போது இரண்டரைக் கோடி ரூபா கிடைத்திருக்கிறது.

உத்தேச மதிப்பீட்டில் மிகுதி மூன்றில் இரண்டு பகுதி நிதியும் கொழும்பிலிருந்து குடாநாட்டுக்கு வந்து சேர இன்னும் எத்தனை வருடங்கள் செல்லும்...?

தமிழ் மக்களை விடுவிப்பதாகவும், அவர்கள் நலன்கள் கவனிக்கப்படுவதாகவும் அரசு பெரிதாகப் பேசுகிறது. ஆனால்...... ஒய்யாரக் கொண்டையிலே தாழம் பூவாம் அதன் உள்ளே இருப்பதுவோ ஈரும் பேனாம் என்ற நிலை தான்...!

தமிழர் தேவைகள் நலன்கள் புறக்கணிக்கப்படும் முந்திய நிலை மாறிவிட்டது அல்லது மாற்றப்பட்டு விட்டது என்று எவ்வாறு கூறுவது? கருதுவது?

# இணக்கமான தீர்வே வழி; ஆஸ்திரேலிய தூதர் கருத்து

கொழும்பு, ஜூலை 27

'இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்த மூலம் தீர்வு காண முடியாது. இணக்கமான தீர்வே காணப்பட வேண்டும்'—இவ்வாறு ஆஸ்திரேலியவெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டைவ்னர் தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த அவர் வியாழக்கிழமை இரவு நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''இலங்கை விடயத்தில் 3 ஆம் தரப்பாக மத்தியஸ்தம் செய்யுமாறு இலங்கை அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ எம்மிடம் கேட்கவில்லை. இரு தரப்பினரும் கேட்கும் பட்சத்தில் மத்தியஸ்தராகச் செயற்பட நாம் தயாராக இருக்கிறோம்

''விடுதலைப் புலிகளின் வன்முறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கை விடயத்தில் நாம் ஈடுபடுவதாயிருந்தால் ஆயுத வன்முறைகளில் ஈடுபடமாட்டோம் என்று புலிகள் முதலில் எழுத்து மூல உறுதியைத் தர வேண்டும்.

''இலங்கை அரசாங்கம் உட்பட எந்த அரசுடனும் யுத்த உதவி செய்வதிலோ ஆயுத கொடுக்கல் வாங்கலிலோ ஆஸ்திரேலியா ஈடுபடமாட்டாது''—இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-21-3)

### தபாலகம் திறக்கப்பட்டது

சண்டிலிப்பாய், ஜூலை 27

கடந்த எட்டு வருட காலமாக இயங்காத நிலையிலிருந்து வந்த மாரீசன்கூடல் உபதபால் அலுவலகம் கடந்த வியாழக்கிழமை முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### வலி. மேற்கில் உதவிப்பணம்

சண்டிலிப்பாய், ஜூலை 27

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஆனி மாதக் கொடுப்பனவு அவ்வப்பகுதி தபால் அலுவலகங்கள் ஊடாக தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

கப்பல் பயணத் தடையால்

# தபால் சேவைகள் பாதிக்கப்படவில்லை

### பிரதம தபாலதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கான பயணிகள் கப்பல் சேவையும், பயணிகள் விமான சேவையும் சீராக இடம்பெறாத போதிலும் அதனால் தபால் சேவைகள் பாதிக்கப்படவில்லை என்று யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

குடாநாட்டுக்கான வெளியூர் தபால் பொதிகள் அனுராதபுரத்தில் இருந்து பலாலிக்கு நாளாந்தம் நடைபெறும் விமான சேவை மூலம் வழமைபோல் இங்கு எடுத்துவரப்படுவதாகவும், அதேபோன்று இங்கிருந்து வெளியிடங்களுக்கான கடிதங்களும் விமானம் மூலம் அனுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கிருந்து விமானம் மூலம் அனுப்பப்படும் தபால்களுக்கு மேலதிகமாக எஞ்சிய கடிதப் பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமும் அனுப்பிவைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் இருந்து அனுப்பப்படும் பதிவுத் தபால்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமே அனுப்பப்பட்டு வருவதாகவும், தபால் போக்குவரத்து தாமதமின்றி நடைபெற்றுவருவதால் கடிதங்களை அஞ்சலில் சேர்க்க பொதுமக்கள் பின்னடிக்கத் தேவையில்லை என்றும் யாழ். பிரதம தபாலதிபர் கூறினார். (ஐ-4)

# கறுப்பு ஜூலையையொட்டி புளொட் அமைப்பு சுவரொட்டி

யாழ்ப்பாணம் ஜூலை 27

கறுப்பு ஜூலையை முன்னிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் (புளொட்) யாழ். நகரின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

14 வருடங்களுக்கு முன்னர் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தென்பகுதியில் கொழும்பிலும் பிற மாவட்டங்களிலும் இனக்கலவரங்கள் வெடித்து தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டதோடு வெலிக்கடைச் சிறைச்சாலையில் நிராயுதபாணிகளான தமிழ்க்கைதிகள் நாகரிகமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

'இதனை நினைவு கூர்ந்து வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்' இப்படி இந்தச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# போலி 'பாஸ்' வழங்கிய இன்ஸ்பெக்டர் கைது!

வவுனியாவில் தங்கியுள்ள அகதிகளுக்கு போலி அனுமதிப்பத்திரங்களை வழங்கினார் என்ற சந்தேகத்தில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி அனுமதி அட்டைகளை வழங்கியதன் மூலம் இவர் ஒரு லட்சம் ரூபா வரையில் லஞ்சம் பெற்றுள்ளார் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை — வவுனியாவில் நிரந்தரமாகத் தங்கியுள்ளவர்களுக்கு நிரந்தர 'பாஸ்' வழங்குவதில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21-3)

# படையினர் வந்திருப்பதாக கூறி வீட்டினுள் புகுந்து கொள்ளை

### பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

''படையினர் வந்திருக்கிறோம் வீட்டைச் சோதிக்க வேண்டும். கேற்றைத்திறவுங்கள்'' என்று கூறிய திருடர் கோஷ்டி ''கேற்'' திறக்கப்பட்டதும் வீட்டினுள் நுழைந்து வீட்டைச் சோதிப்பது போல் பாசாங்கு செய்து வீட்டில் இருந்த பெண்ணின் 3 பவுண் எடையுள்ள சங்கிலியையும் 2 பவுண் எடையுள்ள காப்பையும் அபகரித்துச் சென்றது.

பருத்தித்துறை ஆத்தியடிப் பகுதியில் ஆத்தியடிப் பிள்ளையார்கோயில் பூசகரான மதியாபரணம் என்பவருடைய வீட்டில் கடந்த 24 ஆம் திகதி இரவு 9 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதுதொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-15)

# முயல் வளர்ப்பை ஊக்குவிக்க முயற்சி

வலிகாமம்தெற்கு, ஜூலை 27

யாழ். மாவட்டத்தில் முயல் வளர்ப்பில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்க யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்புப் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் அமைந்துள்ள கால்நடை வளர்ப்பு நிலையங்களூடாக வளர்ப்பு முயல்கள் விநியோகிக்கப்படுவதுடன் அவற்றை வளர்ப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்போர் பிரிவுகளூடாக ஒரு சோடி முயல்கள் 250 ரூபாவுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ஐ - 152)

### கணக்காளர் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

கொழும்பில் நடைபெறவிருந்த கணக்காளர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம்திகதி நடைபெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

### பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

திருநெல்வேலி அபிராமி முன்பள்ளி பாலர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சைவப்பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளிப் பொறுப்பாசிரியை செல்வி ச. சபாரட்ணம் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக திருநெல்வேலி இ. த. க. பாடசாலை அதிபர் சு. ஜெயானந்தன் கலந்து கொள்கின்றார். (இ-4)

## நாளை

**ஆடி 12**

**திங்கட்கிழமை**

**திதி:** நவமி பிற்பகல் 2.28 வரை.

**நட்சத்திரம்:** பரணி முற்பகல் 9.58 வரை.

கார்த்திகை விரதம்

**சுபநேரம்:** 12.02-1.32

**ராகுகாலம்:** 7.32-9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரடிப்படி)

# சமய சந்நிதிகளில்

கடந்த 18ஆம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மானிப்பாய் புனித அன்னாள் ஆலயப் பெருவிழாவில் இன்று ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாட்திருப்பலியும் தொடர்ந்துதிருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்தத் திருவிழாவின் இறுதி நாள் இன்றாகும்: 'தொடரும் பயணம்' என்னும் தலைப்பில் ஆலய பங்குத் தந்தை அருட் திரு ம. வி. இ. ரவிச்சந்திரன் இன்று மாலை உரையாற்றுவார். (ஐ-30)

### சுயதொழில் முயற்சித் திட்டம்

நெடுந்தீவு, ஜூலை 27

சுயதொழில் முயற்சித் திட்டத்திற்கு அமைய நெடுந்தீவில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வதியும் மாதாந்த உதவி நன்கொடைப் பணம் பெறும் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பெண்களுக்கு வழங்குவதற்காக தையல் இயந்திரங்கள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன. விரைவில் இவை உரியவர்களிடம் கையளிக்கப்படும். (ஐ-111)

### ஒன்று கூடல்

சாவகச்சேரி ஜூலை 27

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிறு முற்பகல் 10-30 மணிக்கு அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் கல்லூரியில் நடைபெறும். (ஐ-31)

### சிவானந்தர் திதி பூசை

யாழ்ப்பாணம், ஜூலை 27

குருதேவர் சுவாமி சிவானந்தரின் 34 ஆவது புண்ணிய திதியை ஒட்டி யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில நாளை திங்கட்கிழமை காலை விசேட பூசை நடைபெறவுள்ளது.

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

பேராசிரியர் என். எம். சவிரிமுத்து அடிகளாரின் 'யாழ்ப்பாணம்—யாழ். நிலம்' என்னும் ஆங்கில நூல் வெளியீட்டு வைபவம் இன்று காலை 10-00 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். திருமறைக்கலா மன்றத்தின் ஆதரவில் நடைபெறும்.

யாழ். கல்வித்திணைக்களம் வலயம் - 1 யுனெஸ்கோ திட்டத்தின் உதவி இணைப்பாளர் கே. சண்முகநாதபிள்ளை வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

நூல் பற்றிய விமர்சன உரையை ஆங்கிலத்தில் யாழ். பல்கலைகழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும், தமிழில் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் கலாநிதி கே. குகபாலனும் நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டு வைபவத்தின் இடைவேளை நேரத்தில் திருமறைக்கலாமன்றத்தின் 'சாகாத மனிதம்' நாடகம் இடம்பெறும். (இ-4-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

உயர் தொழில் நுட்ப நிறுவன யாழ்ப்பாண பிராந்திய நிலையம் யாழ். தொழில் நுட்ப கல்லூரியில் இருந்து பிரிந்து தனித்துவமாக இயங்குதல் வேண்டும். அதற்கு நிரந்தர கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈ. பி. டி. பி யின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவு அமைப்பாளர் ஊடாக கட்சியின் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 6 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

★ நிரந்தர இயக்குநரையும் அலுவலக ஆளணியினரையும் நியமித்தல்.

★ டிப்ளோமா கற்கைநெறிகளுக்குத்தேவையான கணனிகள், தட்டச்சு உபகரணங்கள் என்பன காலதாமதமின்றி உடனடியாக வழங்குதல்.

★ நூல் நிலையவசதிகளை உடனடியாக ஏற்படுத்தல்.

★ தேவையான தளபாட வசதிகளை உடனடியாக வழங்கி உதவுதல்.

★ மாணவர்களது பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாக பெற்றுத் தருதல்.

இக் கோரிக்கைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜாவை உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் சந்தித்தனர்.

(இ-5)

# இலவச பண்டித வகுப்புகள்

வடமராட்சியில் இலவச பண்டித வகுப்புகள் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைக்களுக்குரிய இலவச வகுப்புக்களை கரவெட்டிக் கல்விக் கோட்டத்திலுள்ள திருஇருதயக்கல்லூரியில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் வகுப்புக்களில் சேர்ந்து கொள்ளவிரும்புவோர் கரவெட்டிக் கல்விக் கோட்டத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(இ-118)

# விஞ்ஞான செய்முறை மதிப்பீடு

பருத்தித்துறை, ஜூலை 27

மூன்றாண்டுச் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். வலயம் 2 இல் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்கு பத்து அமைப்புக்களைக் கொண்ட விஞ்ஞான செய்முறை மதிப்பீடுகள் யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ் விஞ்ஞான செய்முறையில் சகல மாணவர்களையும் ஈடுபடுத்தி மதிப்பீடு செய்து இரண்டாம் தவணை அறிக்கைப் புத்தகத்தில் பெற்ற புள்ளிகளையும் பதியுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

(இ-118)

# போசாக்கு கல்வித்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வளர்ந்தோருக்கான போசாக்குக் கல்வித்திட்டம் கடந்த வியாழக்கிழமை பொம்மை வெளிப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொம்மைவெளி பகுதிகிராம சேவையாளர் எஸ். ரி. சகுந்தலா தேவியின் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் யாழ். செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. விக்கினேஸ்வரமூர்த்தி கலந்து கொண்டு மேற்படி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ஐ-4)

# ஆலய சூழலில் துப்புரவுப பணி

தீவகத்திலுள்ள பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமான சரவணை சின்னமடு புனித செபமாலை அன்னை ஆலயப் பகுதி தற்பொழுது துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இப்பகுதிக்கும், நாரந்தனை கரம்பன், ஆகிய ஆலயங்களுக்கும் விஜயம் செய்தார்.

(ஐ-30)

# மரண அறிவித்தல்

## சிற்றம்பலம் சந்திரன்

(கூட்டுறவுப் பரிசோதகர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சந்திரன் நேற்று (26 - 07 - 97) மூளாயில் காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் — இராசம்மா தம்பதியினரின் மகனும், ச. பராசக்தியின் அன்புக் கணவரும், ச.கிருஷ்ணேந்திரன், ச.சரளா, ச நந்தினி, ச.கீதாஞ்சலி ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. திருஞானம், ப. லிங்கேஸ்வரி, ம. பரம்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27-7-97 அவரது மூளாய் இல்லத்தில் 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் மூளாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

தகவல்:
கிருஷ்ணேந்திரன்
(மகன்)

பிள்ளையார் கோயிலடி,
மூளாய், சுழிபுரம்.

(48612)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பதிப்பகத்தில் 27-07-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரிச் சர்வதேச விழிப்பு மாநாடு:

# அரச சார்புப் பிரதிநிதிகள் அழைப்பை ஏற்க மறுப்பு!

கொழும்பு, ஜூலை 27

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நாளை நடைபெறவுள்ள சர்வதேச விழிப்பு மாநாட்டில் ஸ்ரீலங்காவில் இருந்து அழைக்கப்பட்டோரில் அரச சார்புப் பிரதி நிதிகள் கலந்து கொள்ளமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கலாநிதி ஜெயம்புரி விக்கிரமரத்தின, நவின் குலரத்ன, சாலிஸ் அபே சேகரா, ஜெயதேவ உயன்கொட, லயனல் பெர்னாண்டோ ஆகிய அரச சார்புப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் இம் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என அரசு பணித்துள்ளதை அடுத்து இவர்கள் அந்த அழைப்பை ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சிறில் ரணதுங்கா, பேர்னாட் திலகரத்ன, ஸ்ரான்லி கல்பகே, தயான் ஜெயதிலக, லோ. கேதீஸ்வரன், பிராட்மன் வீரக்கோன், பாக்கிய ஜோதி சரவணமுத்து ஜெகன் பேரேரா, இரா. சம்பந்தன் ஆகியோர் அழைப்பை ஏற்று மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டுக்கு சுவிஸ் அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்குவதாகக் கூறப்பட்ட போதிலும் அது பற்றி கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவரிடம் விசாரித்த போது அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தத்துக்கு புத்துயிர் ஊட்டும் முயற்சியே இந்த மாநாடு என்ற கருத்தும் பரவலாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-150)

# ஆசியக் கிண்ணம் இலங்கை அணிக்கு

ஆசியக் கிண்ண இறுதிக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி இந்திய அணியை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகுவாக வென்று ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்றுக் கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பூவா தலையாவை வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

50 ஓவர்களின் முடிவில் இந்திய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அசாருதீன், டெண்டுல்கர், கங்கூலி ஆகியோர் முறையே 81, 53, 33 ஓட்டங்களைப் பெற்றனர். இலங்கை அணியின் பந்து வீச்சும், பந்துத் தடுப்பும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. முரளிதரன், அரவிந்த டி சில்வா, மஹாநாம ஆகியோர் அற்புதமான ''கட்சுகளைப்'' பிடித்தனர்.

வெற்றிபெற 240 ஓட்டங்களைப்பெற தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜெயசூரியா, மாவன் அட்டபத்து இருவரும் இந்திய பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்தனர்.

சனத் ஜெயசூரியா 63 ஓட்டங்களையும் மாவன் அட்டபத்து, அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்கா ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 84, 62 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றிபெறத் தேவையான 240 ஓட்டங்களை இலங்கை அணி 37 ஓவர்களிலேயே பெற்று விட்டது.

இந்தப் போட்டியின் சிறந்த வீரனாக மாவன் அட்டபத்துவும் இந்தப்போட்டித் தொடரின் நாயகனாக அர்ஜுனா ரணதுங்காவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கடமைக்கு வராத...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்கனவே தப்பியோடிய படையினரில் இதுவரை 4 ஆயிரம் பேர் கடமைக்குத் திரும்பியுள்ளனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இதேவேளை — விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் பொருட்டு தப்பியோடிய படையினரை மீண்டும் சேவையில் சேர்ந்துக் கொள்ளும்படி இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் றோகான் தளுவத்த வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று நள்ளிரவுக்கு முன்பாகச் சேவைக்குத் திரும்பத் தவறுவோர் இராணுவ நீதிமன்றம் மூலம் தண்டிக்கப்படுவர் என அவர் எச்சரித்தார்.

(இ-5)

## கறுப்பு ஜூலை...

(முதலாம் பக்கத் தொடர்)

பேரணியின் நோக்கம் குறித்து பின் வருமாறு தெரிவித்தார்.

இன்றுள்ள நிலையில் தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளோம்.

நாங்கள் பிரிட்டிஷ் பிரதமரிடம் மகஜர்ஒன்றைக் கையளிக்கவுள்ளோம். அந்த மகஜரில் எங்கள் நாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுள்ளோம்.

எமது நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற போதிலும் 1983 ஜூலை மாதத்தில்— கறுப்பு ஜூலையில் இடம் பெற்ற சம்பவங்கள் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

இவ்வளவு எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் எமது நாட்டில் வாழ முடியாமல் இங்கு வந்துள்ளனர். இதற்காகவே நாங்கள் இந்தத் தினத்தில் ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்து உள்ளோம்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் மூலம் இலங்கையில் துன்பங்களை அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு அமைதியான முறையில் எமது ஒத்துழைப்பை வெளிப்படுத்துகின்றோம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-4-10)

# பொன்விழா

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பொன் விழா இறுதி நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆ. சி. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்ச்சிகள் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும், சிறப்பு விருந்தினராக கல்வி வலயம் — 1 பணிப்பாளர் சு. இரத்தினராசாவும் கலந்து கொள்வர்.

இன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக ''மாணவர்களை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்ற வேண்டியது பாடசாலையா பெற்றோரா?'' என்றதலைப்பில் பட்டி மன்றம் இடம்பெறும். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அதற்குத்தலைமைவகிப்பார்.

## 'குட்வில் கைட்'...

(முதலாம் பக்கத் தொடர்)

பின்னர் பயணம் செய்வோரின் பட்டியல் அனுமதிக்காக இவர்களால் கடற்படையினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

கப்பல் காங்கேசன் துறைக்கு எப்போது புறப்படும் என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்படும் எனவும் —

இக்கப்பலின் முதலாவது பயணத்தின் போது திருமலையில் பல நாள்களாகக் காத்திருக்கும் யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் யாழ். பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 750 இடம்பெயர்ந்தோரும் சுமார் 10 ஆயிரம் பொதுமக்களும் கப்பல் மூலம் திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் வர விண்ணப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'' குட்வில் கைட் '' என்ற இந்தப் பயணிகள் கப்பலில் 350 பேர் மட்டுமே பிரயாணம் செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின்...

(முதலாம் பக்கம் தொடர்)

கப்பட்டு விடும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை காரணமாக முன்னைய பாதையைப்பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வவுனியா செல்வோர் உயிலங்குளம் மார்க்கமாக மன்னார் சென்றே வவுனியா செல்ல வேண்டிய நிலையில் இருந்து வருகின்றனர்.

அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள உயிலங்குளத்துக்கும் இடையில் அவர்கள் மூன்று மைல் தூரம் நடந்து போக வேண்டிய நிலைமை இருந்து வருகிறது.

இதனைக் கருத்திற் கொண்டே தாண்டிக்குளத்துக்கு சமீபமாக உள்ள மறுக்காரம்பளை ஊடாக புதிய பாதை ஒன்றைத்திறப்பதற்கு பேச்சுக்கள் நடை பெற்று வருகின்றன-

வடக்கிற்கான பிரதான பாதையைத் திறக்கும் படையினரின் நடவடிக்கை தாமதம் அடைவதால் தற்போதைய நிலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ளோர் வவுனியா செல்ல புதிய பாதை ஒன்றைத் திறப்பதே சாத்தியமான வழி என்று தொண்டர் நிறுவனங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன. (இ)

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யினர் சிலர் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் படையினரின் உயிரிழப்பு குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை. சம்பவத்தை அடுத்துஅப்பகுதியால் சென்ற பொது மக்கள் சிலர் தாக்குதலுக்கு உள்ளானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org